# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018
# இஸ்லாம் / ඉස්ලාම් - I

சுட்டெண்:.................................. தரம் : **10** நேரம்: 1 மணித்தியாலம்

---

♦ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

- பின்வருவனவற்றுள் மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

1. ஆன்மீகப் பகுதியில் 'வரஉ' என்ற சொல் மூலம் கருதப்படுவது,
   1) பற்றற்ற வாழ்க்கை 2) இறை அன்பு 3) பேணுதல் 4) இறைபயம்

2. நபித்தோழர்கள் ஹபஸாவுக்கு ஹிஜ்ரத் சென்ற நுபுவ்வத் ஆண்டு,
   1) நுபுவ்வத் 5 2) நுபுவ்வத் 3 3) நுபுவ்வத் 6 4) நுபுவ்வத் 10

3. அடிப்படை மூலாதாரங்களில் உள்ளடங்குவது,
   1) இஜ்மா 2) கியாஸ் 3) இஸ்திஹ்ஸான் 4) ஸுன்னா

4. நபி(ஸல்) அவர்களும் சஹாபாக்களும் வாழ்ந்து காட்டிய வழிமுறை,
   1) துறவரம் 2) சூபித்துவம்
   3) உலகப்பற்று 4) அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத்

5. திருப்தியடைந்த மனம் அழைக்கப்படும் விதம்,
   1) நப்ஸுல் லவ்வாமா 2) நப்ஸுல் முத்மஇன்னா
   3) நப்ஸுல் அம்மாரா 4) நப்ஸுல் ஹவா

6. கழா கத்ர் பற்றிய விடயத்தை உள்ளடக்கும் அகீதாப்பிரிவு,
   1) அஸ்ஸம் இய்யாத் 2) அந்நுபுவ்வாத்
   3) அல்இலாஹிய்யாத் 4) அர்ருஹானிய்யாத்

7. றஸுல்மார்களுக்கு கட்டாயம் இருக்க வேண்டிய பண்புகள்,
   1) 2 2) 4 3) 5 4) 20

8. பிரயாணத்தின் போது தொழுகைகளை
   1) தொழாமல் இருக்க முடியும் 2) சேர்த்து மட்டும் தொழலாம்
   3) சுருக்கி மட்டும் தொழலாம் 4) சேர்த்தும் சுருக்கியும் தொழலாம்

9. றமழான் மாதத்தில் மாத்திரம் நிறைவேற்றப்படும் ஒரு தொழுகை,
   1) வித்ர் 2) தராவிஹ் 3) கியாமுல் லைல் 4) ளுஹா

10. அஸ்த.்.பிருல்லாஹ் என்பதன் கருத்து,
    1) அல்லாஹ் மிகத்தூய்மையானவன்
    2) எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே
    3) அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புத் தேடுகின்றேன்.
    4) அல்லாஹ் மிகப் பெரியவன்

11. அர்கானுல் கியாஸில் உள்ளடங்காத விடயம்,
    1) அல் அமல் 2) அல் அஸ்ல் 3) அல் இல்லத் 4) அல்வர்உ

12. ஹுலுக் ஹஸன் என்பது,
    1) தீயபண்பு 2) மோசமான பண்பு
    3) நற்பண்பு 4) துர்நடத்தை

13. நபி (ஸல்) அவர்களின் பாதுகாப்பு விடயத்தில் அதிக அக்கரை செலுத்தியவர் யார்?
    1) அபூ ஜஹ்ல் 2) அபூ ஸுப்யான் 3) அபூதாலிப் 4) உத்பா பின் ஆமிர்

14. அரபு நாட்டின் வடக்கு எல்லை எது?
    1) சிரியபாலைவனம் 2) செங்கடல்
    3) அறபுக்கடல் 4) பாரசீக வளைக்குடா

15. அல்குர்ஆன் கட்டம் கட்டமாக எத்தனை வருடங்கள் இறங்கியது,
    1) 13 வருடங்கள் 2) 23 வருடங்கள் 3) 33 வருடங்கள் 4) 43 வருடங்கள்

16. ரப்புல் ஆலமீன் என்பதன் கருத்து,
    1) மனிதர்களின் இரட்சகன் 2) அகிலங்களின் அருட்கொடை
    3) அகிலங்களின் இரட்சகன் 4) சமுதாயத்தின் இரட்சகன்

17. நபி இப்ராஹிம் (அலை) அவர்களின் பிரதான எதிரியாக செயற்பட்ட அரசன்,
    1) பிர்அவ்ன் 2) அப்ரஹா 3) ஹாமான் 4) நம்ரூத்

18. ‘உலுல் அஸ்ம்’ எனப்படும் நபிமார்களுள் ஒருவர்
    1) ஆதம் (அலை) 2) ஸாலிஹ் (அலை) 3) மூஸா (அலை) 4) சுஐப் (அலை)

19. பொருளால் நிறைவேற்றப்படும் ஒரு இபாதத்,
    1) ஸலாத் 2) அஸ்ஸவ்ம் 3) ஷஹாதத் 4) ஸகாத்

20. ஸஜ்தா ஸஹ்வு என்பது,
    1) மறதிக்கான ஸஜ்தா 2) நன்றி செலுத்துவதற்கான ஸஜ்தா
    3) குர்ஆன் ஓதும்போது வரும் ஸஜ்தா 4) தொழுகைக்கான ஸஜ்தா

21. உஹத் யுத்தம் நடைபெற்ற ஹிஜ்ரி ஆண்டு,
    1) 1 2) 2 3) 3 4)4

22. பின்வருவனவற்றுள் வழிக்கெட்ட அகீதாப்பிரிவு அல்லாதது,
    1) ஜபரியா    2) மு.ஃதஸிலா    3) அஷ்அரிய்யா    4) முர்ஜிய்யா

23. அல்குர்ஆனை ஒன்று திரட்டும் பணிக்குத் தலைவராக நியமிக்கப்பட்ட சஹாபி,
    1) உஸ்மான் (றழி)    2) சைத் பின் ஸாபித் (றழி)
    3) உமர் (றழி)    4) சைத் (றழி)

24. நிரல் X இன் கீழுள்ள சொற்களுக்குப் பொருந்தும் விதத்தில் நிரல் Y உள்ளவற்றை ஒழுங்கு படுத்தினால் பெறப்படும் சரியான ஒழுங்குக வரிசை,

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| பத்ர் | A. ஹிஜ்ரி -6 |
| உஹத் | B. ஹிஜ்ரி -8 |
| ஹுதைபியா | C. ஹிஜ்ரி -3 |
| மக்கா வெற்றி | D. ஹிஜ்ரி -2 |

    1) DCAB    2) DCBA    3)DACB    4) DBCA

25. தயம்மும் செய்யப்பயன்படுத்தப்படுவது,
    1) சுத்தமான நீர்    2) களிமண்
    3) சேற்று மண்    4) புழுதியுள்ள மண்

26. மாஉன் நஜீஸிற்கு உதாரணம்,
    1) இளநீர்    2) தேனீர்    3) சாக்கடை நீர்    4) குளத்து நீர்

27. அல்குர்ஆனை ஓதும் ஒழுங்கு,
    1) தர்தீபுல் நுஸுல்    2) தர்தீபுத் திலாவத்
    3) தர்தீபுல் கிராஅத்    4) தர்தீபுல் உஸுல்

28. முதன்முதலில் அல்குர்ஆன் அருளப்பட்ட மாதம்,
    1) றமழான்    2) துல்ஹஜ்    3) முஹர்ரம்    4) ஸ.ஃபான்

29. இரண்டாம் அகபா உடன்படிக்கை நடைபெற்ற நுபுவ்வத் ஆண்டு,
    1) நுபுவ்வத் 10    2) நுபுவ்வத் 11    3) நுபுவ்வத் 12    4) நுபுவ்வத் 13

30. 'உங்களில் ஒருவர் மற்றவரின் பொருள்களைத் தவரான முறையில் உண்ணாதீர்கள்' என்பது,
    1) குர்ஆன் கூற்று    2) நபி (ஸல்) அவர்களின் கூற்று
    3) அபூபக்கர் (றழி) அவர்களின் கூற்று    4) ஒரு இமாமின் கூற்று

31. ஜின்களை அல்லாஹ் எதனால் படைத்தான்?
    1) நெருப்பினால்    2) மண்ணினால்    3) காற்றினால்    4) ஒளியினால்

32. தொடக்கின் (ஹதஸின்) வகைகள் எத்தனை?

1) 3  2) 4  3) 2  4) 5

33. ஜாஹிலிய்யாக்கால மக்களின் நற்பண்பு அல்லாதது,

1) விருந்தோபல்  2) வாக்குமீராமை  3) பழிக்குப்பழி  4) வீரம்

34. நபி (ஸல்) அவர்களின் ஸீராவை முதலில் தொகுத்தவர்

1) இமாம் அத்தபரி  2) முஹம்மத் பின் இஸ்ஹாக்
3) இப்னு ஷஹ்ரயார்  4) இமாம் பலாதூரி

35. நபி (ஸல்) அவர்களின் உம்மத்தினருக்கு பரகத் செய்யப்படும் நேரம் என ஹதீஸில் குறிப்பிப்பட்டிருப்பது,

1) பகல் பொழுது  2) பின்னேரம்  3) நடுநிசி  4) அதிகாலை

36. பற்றற்ற வாழ்வைக் குறிக்கும் பதம்,

1) வரஉ  2) மஹப்பத்  3) ஸுஹ்த்  4) தவக்குல்

37. ஆன்மீக மேம்பாட்டுக்கான வழி அல்லாதது,

1) தவ்பா  2) தக்வா  3) கித்ப்  4) ஸுஹ்த்

38. பூமியை வளப்படுத்தும் பணி எவ்வாறு அழைக்கப்படுகிறது,

1) கிலாபத்  2) இபாதத்  3) பலாதத்  4) இமாரத்

39. நபி (ஸல்) அவர்கள் தொழுகைகளின் பின் ஓதிய சூறாக்களுள் ஒன்று,

1) சூறா பலக்  2) சூறா பாதிஹா
3) சூறா யாஸின்  4) சூறா றஹ்மான்

40. ஸலாதுல் கவ்ப் என்றால் என்ன?

1) பெருநாள் ொழுகை  2) அச்சத்தொழுகை
3) கிரகணத் தொழுகை  4) மழை வேண்டித் தொழும் தொழுகை

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018
## இஸ்லாம் / ඉස්ලාම් - II

சுட்டெண்:................................... தரம் : **10** நேரம்: 2 மணித்தியாலங்கள்

---

♦ **முதலாம் வினாவுக்கும் விரும்பிய ஏனைய நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1) பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.
   1. வஹியின் இரண்டு பிரிவுகளையும் தருக.
   2. இஜ்மாவின் வகைகள் இரண்டு தருக.
   3. ஸீரா என்றால் என்ன?
   4. அத்தஹியாத்தின் இரண்டு இருப்புக்களையும் தருக.
   5. ஜமா அத்தாக நிறைவேற்றப்படும் இரண்டு சுன்னத்தான தொழுகைகளைத் தருக.
   6. அகீதாவின் நான்கு பிரிவுகளையும் தருக.
   7. சுத்தம் பற்றிக் குறிப்பிடும் ஹதீஸ் ஒன்றை எழுதுக.
   8. மாஉன் தாஹிருக்கு 2 உதாரணம் தருக.
   9. இறை அடியார்களின் நற்பண்புகள் பற்றிக் குறிப்பிடும் ஒரு சூறாவைத் தருக.
   10. கடுமையான நஜீஸுக்கு இரண்டு உதாரணம் தருக.

(2+10 = 20புள்ளிகள்)

2) 1. றிஸாலத், ஹிதாயத் எனும் பதங்களை விளக்குக.
   2. தூய்மையான அகீதாவைப் பாதுகாக்க உழைத்த 3 இமாம்களை தருக.
   3. எமது அன்றாட நடவடிக்கைகளை இபாதத்தாக மாற்றுவதற்குரிய நிபந்தனைகள் 5 தருக.

(2+3+5 = 10புள்ளிகள்)

3) 1. தஸ்கிய்யா என்றால் என்ன?
   2. ஸஜ்தாக்களின் மூன்று வகைகளையும் தருக.
   3. தொழுகையின் லௌகீகப் பயன்கள் 5 தருக.

(2+3+5 = 10புள்ளிகள்)

4) 1. மதீனாவின் பழைய பெயர் என்ன?
   2. ஜாஹிலிய்யாக்கால மக்களிடம் காணப்பட்ட நற்பண்புகள் 3 தருக.
   3. துணை மூலாதாரங்கள் 5 தருக.

(2+3+5 = 10புள்ளிகள்)

5) 1. குத்தாபுல் வஹி எனப்படுவோர் யாவர்?
   2. கியாஸின் ருகுன்கள் 3 தருக.
   3. தவ்பாவின் நிபந்தனைகள் 4 தருக.

(2+3+5 = 10புள்ளிகள்)

6) 1. வஹி என்றால் என்ன?
   2. நபி (ஸல்) அவர்களுக்கு வஹி அருளப்பட்ட முறைகள் 3 தருக.
   3. வஹியின் முக்கியத்துவங்கள் 5 தருக.

(2+3+5 = 10புள்ளிகள்)

7) 1. நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றி முதன் முதலில் வெளிவந்த நூல் எது?
   2. நபி (ஸல்) அவர்களின் ஸீரா பாதுகாக்கப்படுவதற்கான காரணங்கள் 3 தருக.
   3. இஸ்லாமிய பொருளாதாரத்தின் அடிப்படைகள் 5 தருக.

(2+3+5 = 10புள்ளிகள்)